**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>**

**<u>CC No.52/2024</u>**

அ.சா.– 1 Name: Veeramani s/o Malaimarundhu நாள் – 09.07.2026.

**குறுக்கு விசாரணை –**

எதிரியுடைய அண்ணன் ஜெய்கணேஷ் என்பவர் பெயரிலும் இதே நீதிமன்றத்தில் CC.299/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் எதிரி மற்றும் ஜெய்கணேஷ் ஆகியவரை எனக்கு சிறு வயது முதலே தெரியும் அவர்கள் இருவரும் சகோதரர்கள் என்ற விவரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். CC.306/2018, CC.51/2024, CC.299/2019, CC.50/2024, STC.267/2025 ஆகிய காசலை வழக்குகளை நான் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி அனைத்து வழக்குகளிலும் நான் மெடிக்கல் பிசினஸ் செய்கிறேன் சிட் பண்டு நடத்தி வருகிறேன் என்று தான் கூறியுள்ளேன் வட்டிக்கு தொழில் செய்யும் விவரத்தினை நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் ஆகஸ்ட் 2021–ல் எதிரி கடன் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிக்கு கொடுக்கப்பட்டுள்ள கடனை கொடுப்பதற்கு முன்னதாகவே எதிரியின் அண்ணனுக்கு கடன் கொடுத்து அவர் அதனை திருப்பி செலுத்தவில்லை என்பதற்காக காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஒரே குடும்பத்தை சேர்ந்த நபர் என்னை ஏமாற்றியுள்ளதால் அதே குடும்பத்தில் உள்ள மற்றொரு நபருக்கு கடன் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால் தவறு. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி பதிலறிவு அனுப்பினார் என்று சொன்னால் சரிதான். எதிரி அவருடைய பதில் அறிவிப்பில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராமிசரி நோட்டில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று மறுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் அதசாஆ 1 பிராமிசரி நோட் ஆனது என்னால் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் அதில் உள்ள கையொப்பம் எதிரியுடையது அல்ல என்று சொன்னால் தவறு. அதசாஆ 2 காசோலையில் எதிரி பிரேம் என்று சையப்பமிட்டுள்ளார் ஆனால் அ.த.சாஆ 1 ரொக்க ஆன்ட்டிமாண்டு பத்திரத்தில் பி பிரேம்குமார் என்று கையொப்பம் காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான். மேற்படியில் கையெழுத்துகளில் எந்த கையெழுத்து பிரேம்குமார் உடையது எந்த கையெழுத்து உண்மையானது என்று கேட்டால் இரண்டுமே உண்மைதான் அவர் இவ்வாறு மாற்றி கையப்பமிட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு இப்போது தான் தெரிய வருகிறது .எதிரியுடைய ஒப்புக்கொள்ளப்பட்ட கையப்பத்துடன் பிராமிசரி நோட்டில் உள்ள கையப்பத்தை தடை அறிவியல் நிபுணருக்கு அனுப்பி ஒப்பீடு செய்வதற்கு எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். அதசாஆ 1 pramisary நோட்டில் எனது பெயர் தான் ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடும் விவரங்கள் எதுவும் அந்த ஆவணத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி பிராமிஸ்சரி

நோட்டை தவிர வேறு எந்த ஆவணமும் எதிரிக்கு பணம் கொடுத்ததை நிரூபணம் செய்வதற்கு நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். காசோலை போட்டுள்ளேன். சிசி 51/24 என்ற வழக்கிலும் பிராமிஸ்சரி நோட்டில் எதிரியின் பெயர் குறிப்பிடவில்லை என்று குறுக்கு விசாரணையின் போது கேட்கப்பட்டபோது நான் சரி என்று கூறியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் காசோலை தாக்கல் செய்யப்பட்ட தேதி திருப்பப்பட்ட தேதி மற்றும் சிசி 51/24 என்ற வழக்கில் காசோலை தாக்கல் செய்யப்பட்ட தேதி திருப்பப்பட்ட தேதி இரண்டுமே ஒன்று தான் என்றால் சரிதான். பிராமிசரி நோட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகளான அசோக் குமார் ,பிரதாப் மற்றும் துரைவேலு ஆகிய மூன்று பேரும் எனக்கு தெரிந்தவர்கள் என்று சொன்னால் துரைவேல் மற்றும் பிரேம் ஆகியோரை எதிரிக்குத் தெரியும் அசோக் குமாரை மட்டும்தான் தெரியாது. பிராமிசரி நோட்டை உறுதிப்படுத்தும் வகையில் மேற்படி சாட்சிகளை வழக்கில் விசாரிப்பதற்கு எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கிலும் நான் தாக்கல் செய்துள்ள மற்ற காசோலை வழக்குகளிலும் கடன் கொடுத்த நாளிலிருந்து வட்டி தரவில்லை என்று கூறி வட்டி மற்றும் அசல் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் பிரேம்குமார் அவரது அப்பா மூலமாக என்னை அணுகியதாக கூறியுள்ளேன் அப்போது எதிரியின் அண்ணனுக்கு பணம் கொடுத்து ஏமாற்றி இருக்கும் பட்சத்தில் எவ்வாறு பணம் கொடுக்க முடியும் என்று நான் கேட்கவில்லையா என்றால் நான் கேட்டதற்கு எதிரியின் அப்பா எதிரியின் அண்ணனை வீட்டை விட்டு அனுப்பி விட்டதாகவும் அவன் தனக்கு மகன் இல்லை என்றும் நான் தான் பணம் கொடுத்து உதவ வேண்டும் என்றும் என்னை நிர்பந்தித்தார் அதனால் கொடுத்தேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோநோட்டில் எதிரி அப்பாவுடைய கையொப்பம் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியுடைய அப்பா என்னிடம் சீட்டு போட்டு இருந்தார் என்றாலும் அந்த சீட்டில் அவர் தொகையை செலுத்தவில்லை என்பதற்காக அவருடைய வாகனத்தை எடுத்து வந்து விட்டேன் என்றாலும் அதனை திருப்பித் தருவதற்காக எதிரிடமிருந்து இந்த வழக்கு காசோலையை நான் பெற்றுக் கொண்டு வாகனத்தை திருப்பித் தந்தேன் அந்த வகையில் தான் இந்த வழக்கின் காசோலை எனக்கு கிடைத்தது என்று சொன்னால் தவறு. எதிரியுடைய அண்ணன் மீது பணம் பறிப்பதற்காக வழக்கு போட்டு அதை அவர் நடத்தி வருகிறார் என்றாலும் மேலும் எதிரியுடைய எதிர் மீதும் வழக்கு போட்டு அவரிடம் இருந்து பணம் பெறுவதற்காக தவறான நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் தவறு. உண்மையில் நான் எதிரிக்கு கடன் கொடுத்திருந்தால் எதிரியின் அப்பாவுடைய கையெழுத்தையும் சாட்சியாக புரோநோட்டில் வாங்கி இருப்பேன் அவ்வாறு நான் கடன் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் தவறு . இந்த கடனுக்காக எதிரி என் அப்பா தனியாக எனக்கு கொடுத்த புரோ நோட்டு என்னிடம் உள்ளது. அந்தப் புரோநோட்டை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்று கேட்டால் முடியும். பொதுவாக கடன் பெறும் நபர்கள் ஓரிரு மாதங்களுக்காவது வட்டி செலுத்துவார்கள் நான் தாக்கல் செய்யும் அனைத்து

வழக்குகளிலும் வட்டியை செலுத்தப்படவில்லை என்று கூறி தாக்கல் செய்து வருகிறேன் இதிலிருந்து நான் பொய்யாக வழக்குகளை தாக்கல் செய்கிறேன் என்பது தெரிய வருகிறது என்று சொன்னால் தவறு. வழக்கமாக நான் வட்டிக்கு கொடுக்கும் பணத்திற்கான வட்டி தொகையினை வசூல் செய்வதற்கு நியமிக்கப்பட்ட துர்க்கை ராஜ் என்பவர் விபத்தில் இறந்து விட்டதாக கூறப்படுகிறது அது உண்மையா என்று கேட்டால் ஆம். நான் இந்த வட்டி தொழிலுக்காக பல லட்சம் அவரிடம் கொடுத்து வைத்திருந்தேன் அதை என்னால் மீட்க முடியவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு அதனால் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்று கேட்டால் ஒரு கோடி 50 லட்சம் நஷ்டம் ஏற்பட்டது . எந்த வருடம் அவர் இறந்தார் என்று கேட்டால் 2021. மேற்படி நஷ்டத்தை ஈடு செய்வதற்காக எனது கையில் வைத்திருந்த செக்யூரிட்டி காசோலைகளை பயன்படுத்தி நான் வரிசையாக வழக்கு தாக்கல் செய்து பணத்தை ஈடு செய்ய முயற்சி செய்கிறேன் என்று சொன்னால் தவறு. பிராமிசரி நோட்டில் எனது பெயர் குறிப்பிடப்படவில்லை அது எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் இல்லை அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் தவறு. இவ்வழக்கு காசோலையானது சட்டத்துக்கு உட்பட்டு வசூலிக்கப்பட வேண்டிய கடனுக்காக கொடுக்கப்பட்ட காசோலை இல்லை என்று சொன்னால் தவறு.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.